# அரசும்-புலிகளும் யுத்த நிறுத்தம் செய்யவேண்டும்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 11 இதழ் 259

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 27 — 10 — 1992


## சு. க. எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

'அரசும் விடுதலைப்புலிகளும் நேரடிப் போச்சுவார்த்தையில் ஈடுபட்டு முதலில் போர் நிறுத்தம் ஒன்றை செய்துகொள்ள வேண்டும்'

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கிங்ஸ்லி விக

(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக் குழுவில் கருத்து முரண்பாடு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்குள்ளும் கருத்து முரண்பாடுகள் தீவிரமடைந்து வருவதாக தெரிவிக்கப்படு

(4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவ தலைமைபீட மோதல் தொடர்கிறது

(கொழும்பு)

இராணுவத் தலைமைப்பீடத்தில் தொடர்ந்தும் பதவிப் போட்டியும், கருத்து முரண்பாடும் நிலவி வருவதாகக்

(4ம் பக்கம் பார்க்க)

## ★ 10 காவலரண்கள் தகர்ப்பு

# மன்னாரில் அதிரடி தொடர்கிறது

# பத்து படையினர் உயிரிழப்பு!

## மூன்று புலிகள் வீரச்சாவு

(மன்னார்)

**மன்னாரில் விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை அதிரடித் தாக்குதல் ஒன்றை நடாத்தி, இராணுவத்தினரின் 10 காவல் அரண்களையும், அவர்கள் வசமிருந்த வீடு ஒன்றையும், பெருமளவு ஆயுதங்களையும் கைப்பற்றினார்கள். இத்தாக்குதலின் போது 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். புலிகள் தரப்பில் 3 வேங்கைகள் வீரச் சாவு அடைந்தனர்.**

மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்துக்கும், கரம்பக் குளத்திற்கும் இடையிலிருந்த காவல் அரண்களே நேற்று அதிகாலை புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தன.

நேற்று அதிகாலை 2-15 மணியளவில் ஆரம்பிக்கப் பட்ட தாக்குதல் 30 நிமிட நேரங்கள் நீடித்தது. காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த வேளையில் இராணுவத்தினரின் உதவிக்கென அடம்பன், உயிலங்குளம் ஆகிய இரண்டு இடங்களிலிருந்தும்பவள் கவச வாக

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில்நேற்று ஆர்ப்பாட்ட பேரணி

(கொழும்பு)

கொழும்பில் நேற்று 13 எதிரணி கட்சிகள் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தினர்.

அவசரகால சட்டவிதிகளில் இன்னமும் நீக்கப்படாமல் அமுலில் இருக்கும் கடுமையான விதிகள் சிலவற்றை நீக்கக் கோரி இவ்ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது.

இந்த ஊர்வலத்தைத் தொடர்ந்து கிருலப்பனையில் இக்கட்சிகள் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தின. (சி)

## பாதுகாப்பு நிலைமை குறித்து 4 நகரங்களில் முக்கிய மாநாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பாதுகாப்பு நிலைகுறித்து கடந்தசில தினங்களாக நான்கு முக்கிய நகரங்களில் பாதுகாப்பு உயர் நிலை மாநாடு நடைபெற்றுள்ளது.

இம்மாநாடுகள் வவுனியா, அநுராதபுரம், பொலநறுவை, அம்பாறை ஆகிய நகரங்களில் நடைபெற்றது. இம்மாநாடுகளில் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க உட்பட படை தளபதிகள் பலர் கலந்து கொண்டனராம்.

சிங்கள, முஸ்லிம் எல்லைக் கிராமங்களுக்கான பெரும் பாதுகாப்பு திட்டத்தால் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் பாதிப்பு ஏற்பட்டு வருவது குறித்தும் இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டதாம். (சி)

## முஸ்லிம் எம். பி.க்கள் பதவி விலக மறுப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றில் எம். பி. பதவியிலும், அமைச்சர் பதவியிலும் இருக்கும் முஸ்லிம் எம். பி.க்கள் தங்கள் பதவிகளைத் துறக்க மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவும் இதனால் முஸ்லிம் எம் பிக்களும், அமைச்சர்களும் ராஜினாமாச் செய்ய வேண்டுமென பல முஸ்லிம் குழுக்கள் கோரிக்கை விடுத்தி

(4ம் பக்கம் பார்க்க)

## நீர்மூழ்கி கப்பல் புலிகள் தயாரிப்பு

### ஐலண்ட் கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கடற் புலிகள் வடபகுதியில் 'நீர் மூழ்கிக்கப்பல்களை தயாரித்து வருவதாக புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்ததாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடற்படையின் போர்க்கப்பல்களை தயாரித்து வருவதாக அச்செய்தி குறிப்பிட்டுள்ளது.

கடற்படைக் கப்பலின் 'ராடார்' கருவியில் இந்த நீர்

(4ம் பக்கம் பார்க்க)

## 500 பொலிஸார் எல்லைகளுக்கு விரைவு

(கொழும்பு)

கிழக்கில் எல்லைக்கிராமங்களை பாதுகாப்பதற்கென 500க்கும் மேற்பட்ட பொலிசார் மட்டு, அம்பாறைமாவட்டங்களிலிருந்தும் வடமத்திய மாகாணங்களிலிருந்தும்

4-ம பக்கம் பார்க்க

## முஸ்லிம் படை தயாராகி வருகிறது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் இளைஞர்களை கொண்ட ஆயுதப் படை ஒன்றை அமைத்து வருவதாக அதன் தலைவர் எம். எச். எம் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## 10,000 சிங்களவர், முஸ்லிம்கள் கிழக்கிலிருந்து வெளியேற முஸ்தீபு!

(கொழும்பு)

கிழக்கில் பொலநறுவை பகுதியிலுள்ள 27 எல்லைக்கிராமங்களை சேர்ந்த சுமார் பத்தாயிரம் சிங்கள, முஸ்லிம் கிராமவாசிகள் அங்கிருந்து வெளியேறப் போவதாக எச்சரித்துள்ளனர்.

இப்பகுதியில் சிங்கள கிராமம் ஒன்றில் கூடிய சுமார் பத்தாயிரம் பேர் தங்களுக்கு

(4ம் பக்கம் பார்க்க)


வனம் வானுயர
வளம் தானுயரும்


## 60நாட்களில் 1,250படையினர் ராணுவத்திலிருந்து விலகினர்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து கடந்த 60 நாட்களில் மட்டும் 1,250 படையினர் விலகியுள்ளதாக ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் மாதம் 8ம் திகதியிலிருந்து இம்மாதம் 8ம்திகதி வரையிலான 60 நாட்களில் இராணுவ நிரந்தர படையிலிருந்து 875 படையினரும் தொண்டர் படையிலிருந்து 375 படையினரும் விலகியுள்ளனர்.

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தமிழ் அகராதி

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, மற்றும் கலை நாவல், இலக்கியம், சிறுகதை, அரசியல், வரலாறு போன்ற தரமான நூல்களும் சலனம், சுபமங்களா, துளிர் போன்ற சஞ்சிகைகளும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம், 405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6913)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6887)

### குறைந்த சலார் குறித்த நேரம் தரன் ஸ்ரூடியோ

தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92 — 27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலை கட்டு. 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-6878)

### நீம் சுகாதார தூபம்

"நுளம்புத்தொல்லை – மலேரியாக் காய்ச்சல் பரவுகிறது. பத்திரிகைச் செய்தி. "நீம்" இருக்கப் பயமேன்? மிகக் கைவற் அபயக்குரல் நீம் சுகாதார தூபம் நுளம்புத் தொல்லையிலிருந்து விடுதலை தருகிறது ஓர் இயற்கைப் பாதுகாப்பு அன்று கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது மிக்கவைற. யாழ்ப்பாணம. (ஏ-2534)

### ராகு, கேது செவ்வாய் மாற்றங்கள்

(30-10-92) ராகு. கேது மாற்றம், (04-11-92) செவ்வாய் மாற்றம் ரூ 7/50 எங்கும் விற்பனையாகின்றன. மமிலன், பாலாஜி புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். Prof: சத்தியஞானசன். (சி-6926

### விளாம் பழங்கள் தேவை

நன்கு பழுத்த விளாம் பழங்கள் கொள்வனவு செய்யப்படும். விலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். சுரபி உணவு பதனிடல் நிறுவனம் பிரதேசசபை முன் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (ஏ-2536)

### தேவை

கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் ஆண்டு 5இல் இருந்து G. C. E. O./L. வரை கல்வி கற்பிக்கக் கூடிய ஆசிரியை ஒருவர் தேவை. இளைப்பாறிய ஆசிரியை விரும்பத்தக்கது. விபரங்கட்கு நிர்வாக செயலாளர், வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம், 237, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6927)

### பல் கட்டுமிடம்

உங்கள் பற்களை நியாயமான விலையில் ஒரே நாளில் சிறந்த முறையில் கட்டி செல்வதற்கும், கண்களை பரிசோதனை செய்து மூக்கு கண்ணாடியை பெற்றுக்கொள்ளவும் உடனே நாடுங்கள் Dr. சேனாதிராசா M. H P.I. இல. 146, பருத்தித்துறை வீதி, (அரசடி சந்தி, நல்லூர்), யாழ்ப்பாணம். (சி-6928)

அகதி முகாம்களில்

# போஷாக்கு உணவு வழங்க ஏற்பாடு

(வட்டுக்கோட்டை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஹெக்டர்ஜோசப் தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் உள்ள அகதிமுகாம்களில் இருப்போரின் போஷாக்கு குறித்து ஆராயப்பட்டது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், செஞ்சிலுவைச் சங்கம் சுகாதாரத்திணைக்களம், ஆகிய ஸ்தாபனங்களின் முக்கிய பிரதிநிதிகள் இந்த ஆராய்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வழங்கினர்.

அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் போஷாக்குக்குறைந்த கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் இந்த ஸ்தாபனங்கள் இணைந்து போஷாக்கு உணவு வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. (139)

# தியோபிலஸ் வீட்டுக்கு வெளியே குண்டு வெடித்தது

(கொழும்பு)

கடந்த மாதம் கொழும்பில் வைத்து சுட்டுகொல்லப்பட்டு மோசடி ஒழிப்புபிரிவுசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ. தியோபிலஸின் கொழும்பு வீட்டுக்கு வெளியிலேயே கடந்த வெள்ளிக்கிழமைகாலை 7-30 மணியளவில் குண்டு வெடித்தது

இதனால் தியோபிலஸ் வீட்டு பணிப்பெண் படுகாயமடைந்தார். ஜாவத்தை சமிட் தொடர்மாடியில் உள்ளதியோபிலஸின் வீட்டுக்கு வெளியே இக்குண்டு வைக்கப்பட்டிருந்தது.

குப்பையை தொட்டிக்குள் கொட்டிய பணிப்பெண் குண்டு வெடிப்பில் காயமடைந்தார். பல ஜன்னல் கண்ணாடிகளும் அதிர்வினால் வெடித்துச்சிதறின. (சி)

# முதியோர் தொகை 20லட்சமாகஉயரும்

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதியோரின் எண்ணிக்கை 20 லட்சமாக அதிகரிக்குமென புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கிறது.

1981 இல் 60 வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை .0 லட்சமாக இருந்தது. தற்போது பதினைந்து லட்சத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது. இது மொத்த சனத்தொகையில் 7 4 சதவீதமாகும்.

அடுத்தநூற்றாண்டின் ஆரம்பத்திலேயே 60 வயதுக்கும் கூடியோரின் தொகை 20 லட்சமாக உயரும் சிறந்த சுகாதார வசதிகள் காரணமாக மக்களின் ஆயுள் காலம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (சி)

UNIVERSITY OF JAFFNA

Tender Notice

Tenders are invited for the following from contractors registered for buildings works with University of Jaffna or ICTAD.

a) Repairs / Painting to Balasingam Hall

b) Repairs / Painting to Physics block

Tender forms can be obtained from works Engineer, University of Jaffna from 27-10-92 - 30-10-92 during office hours upon producing receipt from Bursar, University of Jaffna for the following for each tender.

a) Refundable deposit - Rs. 2000/-

b) Non - refundable deposit – Rs. 200/-

Perfected tenders to be sent to reach Registrar, University of Jaffna before 10 00 a.m. on 12-11-92.

Tender board, University of Jaffna reserves the right to reject any tender.

Registrar.

University of Jaffna, Thirunelvely, Jaffna.

(A 2531)

# இராசி பலன்

27-10-1992

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 11)

துதியை பி. இ. 12-50 வரை விசாகம் மு இ. 10-33 வரை. மரணயோகம் இராகுகாலம் மாலை 3-03 முதல் 4-33 வரை சுபநேரம காலை 10-30 முதல் 12-03 வரை'

மேடம்: வெளியில் அலைச்சல், துவேஷசம், பந்துவிரோதம்.

இடபம்; புத்திர சௌக்கியம், சந்துருநாசம், தனவரவு.

மிதுனம்: காரியசித்தி, குடும்ப செலவு, மனச்சந்தோஷம்.

கடகம்: மனப்பயம், உஷ்ண வியாதி, காரியபங்கம்.

சிங்கம்: அபோஜனம், கடன்சுமை, சகோதர கவலை.

கன்னி: புத்திமேன்மை, நம்பிக்கை தொழில் உறவு.

துலாம்:, மனக்கவலை சரீர பீடை, துரோகச்செயல்.

விருச்சிகம்: புதிய சிந்தனை, பொதுஜன மதிப்பு, பயணம்.

தனுசு: வியாதி சோகம், தாழ்ந்தநிலை. தற்பெருமை

மகரம்: சகோதர உதவி, விருந்துண்ணல், இனசன உறவு.

கும்பம்: மனோ உல்லாசம், காரிய வெற்றி, தொழில் சிறப்பு.

மீனம்: கடன்சுமை, புத்திரர்கவலை, அதிகாரம்.

— ஜோஸ்யர்

அநுரா மிரட்டுவதாக

# சிறிமா புகார்

(கொழும்பு)

தனது மகன் அநுரா தன்னை மிரட்டுவதாக சுதந்திரக்கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா புகார் செய்துள்ளார்.

சில சுதந்திரக்கட்சி பௌத்த குருமார் ரோஸ்மீட் பிளேஸிலுள்ள இவரது இல்லத்துக்கு வெளியே கூடிநிற்கிறார்கள் என்ற செய்தி கேட்டதும் அங்கு சென்ற சிறிமா தனது மகன் தன்னை மிரட்ட பல வழிகளை கையாள்வதாக கூறினார்.

கண்ணீர்மல்கியபடி திருமதி சிறிமா பேசியபோது, இந்த கைய தந்திர வேலைகள் என்னை தடுக்கமாட்டா. இந்த வகையில் அநுரா பண்டாரநாயக்கா கட்சியின் தலைமைக்கு வருவதாயின் "உயிரற்ற எனது சடலத்தின் மேலாகவே கடந்து வந்து அதனை செய்யமுடியும்" எனவும கூறினார். (சி)

# மெரினா கப்பலில் உரம் வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

மெரினா கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வந்தது. இக்கப்பலில் முழுக்க உரவகைகளே வந்துள்ளது.

ஹெயர் நிறுவனத்துக்கு வந்துள்ள இந்த உரவகைகள் விரைவில் விவசாயிகளுக்கு பகிர்ந்து வழங்கப்படவுள்ளது. (வி-51)

# கம்பியூட்டர் முறையில் புகைப்படம் கழுவுதல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்று வவுனியாவில் கம்பியூட்டர் முறையில் புகைப்படம்கழுவும்சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

இதனால் வடபகுதி மக்கள் பெரிதும் பயனடைவர். கொழும்பு சென்று வரும் சிரமம் ஏற்படாது. அத்துடன் பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கவுள்ளது.

சுமுகநிலை தோன்றிய பின் இந்நிறுவனம் தனது சேவையை யாழ்நகரிலும் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (159)

# அகதிகளுக்கு 400 கொட்டகைகள் பூர்த்தி

(வட்டுக்கோட்டை)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய 400 கொட்டகைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

75 கொட்டகைகளுக்கான வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

இந்த கொட்டகைகளுக்கான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதும் அகதிகள் குடியிருப்பதற்கு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (139)

# கடற்றொழிலாளருக்கு உதவி நோர்வே செஞ்சிலுவை

(தாளையடி)

யாழ்ப்பாணமாவட்ட கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கயாழ்ப்பாணகிளை ஊடாக 42 லட்ச ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை வழங்கவுள்ளது.

இதில் முதல்தொகுதி மீன்பிடி உபகரணங்கள் கொழும்பில் கொள்முதல் செய்யப்பட்டு கப்பல்மூலம் அடுத்த மாதம் 10 ம் திகதியளவில் இங்குவந்து சேரவிருக்கின்றன

மீன்பிடி உபகரணங்கள் அனைத்துப் பிரிவுகளிலுமுள்ள கடற்றொழிலாளர்கள் குடும்பங்களுக்கும் நீண்ட கால கடனடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படவிருக்கின்றன. (163

# நோயாளர்களை ஆசிர்வதித்தல்

(அரியாலை)

யாழ். சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்று வந்த நோயாளர்களை ஆசீர்வதிக்கும்திருச்சடங்குகள் இனிமேல் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுமென மறைப்பங்கு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (59)

# கந்தஷஷ்டி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை, திருவில் வயலூர் ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தில் நேற்று ஆரம்பமான கந்தஷஷ்டி விழா தொடர்ந்து நடைபெறும்.

விஷேட நிகழ்ச்சியாக தினமும் 4-30 மணிமுதல் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சன்னிதானத்தின் பிரதம சிஷ்யன், முத்தமிழ்மணி சி. வை. நித்தியானந்த சர்மாவினால் "கந்தவேள் கருணை" எனும் விடயம் பற்றிய தெய்வீக இசைப் பேருரை நடைபெறும். (அ)

# பண்ணிசை போட்டி

(பண்டத்தரிப்பு)

கீரிமலை சிவநெறிக்கழகம் இவ்வருடத்திற்கான பண்ணிசை போட்டியை அடுத்த மாதம் முதலாம் திகதியன்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடாத்தவுள்ளது. இப்போட்டியில் 20 வயதுக்கும் 25 வயதுக்கும் உட்பட்ட ஆண்-பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம் என்றும் விண்ணப்பங்களை இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் திரு. சு விநாயகரத்தினம் சிவநெறிக்கழக செயலாளர், மகாஜனகல்லூரி, தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சிவதர்மவள்ளல்" கலாநிதி க. கனகராசாவின்பிறந்த நாளை முன்னிட்டு இப்போட்டி நடாத்தப்படுகின்றது. (72)

# சிலாபத்தில் ராணுவ தளபாடங்களுடன் மூழ்கிய 'கன்டுல' கப்பலின் பெறுமதி 20 கோடி ரூபா

## - ஆயுதங்களின் பெறுமதி பல கோடி ரூபா -

(கொழும்பு)

பலகோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் ஏற்றிக்கொண்டு கொழும்பலிருந்து மன்னாருக்கு சென்ற கடற்படைக் கப்பலான 'கன்டுல' கற்பிட்டி கடற்படை முகாமிலிருந்து இரண்டரை மைலுக்கு அப்பால் கடலில் மூழ்கிய சம்பவம் இம்மாதத்தில் இடம்பெற்ற இரண்டாவது பாரிய ஆயுத இழப்பாகும்.

மன்னார்-முல்லைத்தீவு பகுதியில் நிலைகொண்டுள்ள பாதுகாப்பு படையினருக்கு தேவையான ஆயுதங்கள், தோட்டாக்கள், வெடிமருந்துகள், இராணுவ தளபாடங்கள், உணவுப் பொருட்கள் ஆகியன 'கன்டுல' கப்பலில் கொண்டு வரப்பட்டன.

இதை 'லான்டிங் கிராப்ற்' என அழைப்பர். கொழும்பிலிருந்து கடந்த 8ம் திகதி மன்னாருக்கு புறப்பட்ட இக்கப்பலில் நான்கு கொள்கலங்களில் ஆயுதங்களும் இராணுவ தளபாடங்களும் இருந்தன. இவை பலகோடி ரூபா பெறுமதியானவை. இக்கப்பலுக்கு பாதுகாப்பாக சூரயா' என்ற பீரங்கிப் படகும் அனுப்பப்பட்டது.

கப்பலில் 12 இராணுவ சிப்பாய்களும் 5 பொலிசாரும், 17 கடற்படையினருமாக 34 பேர் இருந்தனர். இக்கப்பலுக்கு லெப்டினன் கமாண்டர் வீரசேகர பொறுப்பாக இருந்தார்.

கடல் கொந்தளிப்பு அதிகமாக இருப்பதாலும், பொருகளின் எடை கூடுதலாக இருப்பதையும் காரணம்காட்டி மன்னார் பிரயாணத்தை ஒத்தி வைக்குமாறு தலைமைப்பீடத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எனினும் ஆயுதப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி உடனடியாக கப்பலை கொண்டுசெல்லுமாறு மேலதிகாரிகள் அவரைப் பணித்தனராம்.

'கன்டுல' கப்பல் 1986ம் ஆண்டு கொரியாவிலிருந்து வாங்கப்பட்டது. இதன் பெறுமதி 20 கோடி 2000 லட்சம் ரூபாவாகும் மன்னார், வெற்றிலைக்கேணி, காரைநகர், மூதூர் போன்ற இடங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளுக்கு இந்த 'கன்டுல' கப்பல மூலமே துருப்புகளும் இராணுவ தளபாடங்களும் எடுத்துச் செல்லப்பட்டன

கடற்கரையை அண்டிய சுமார் .0 அடி ஆழத்தில் நின்று கப்பலில்உள்ள பாரிய ஏணிமூலம் இராணுவ டாங்கிகளை இறக்கும் வல்லமை இதற்குண்டு. இதனால் இக்கப்பலை 'லான்டிங்கிராப்ற்' என அழைப்பர்

இவ்வாறான இன்னும் ஒரு லாண்டிங் கிராப்ற் மாத்திரமே கடற்படையிடம் உள்ளது. இது ஒரு சீனத்தயாரிப்பாகும்.

'கன்டுல' கப்பல் கற்பிட்டிக்கு அருகில் செல்லும்போது கடல் சீற்றத்தினால் நீர் கப்பலினுள்ளே புகுந்துள்ளது. நீரை வெளியேற்றும் இயந்திரம் இயங்க மறுத்ததினால் நீர் கப்பலின் இயந்திர அறைக்கும் ஜெனரேட்டருக்கும் புகுந்து கப்பலின் இயக்கத்தை நிறுத்தியுள்ளது.

பின்னர் கப்பலின் உள்ளே அதிகளவு நீர் புகுந்ததால் கப்பல் மூழ்க ஆரம்பித்தது. பாதுகாப்பிற்காகவந்த 'சூரயா' பீரங்கிப்படகு இதுபற்றி கற்பிட்டி முகாமுக்கு அறிவித்து அவசரஉதவி கோரியது. கப்பலில் இருந்த படையினரை மாத்திரமே பீரங்கிப்படகில் இருந்தவர்களால் காப்பாற்ற முடிந்தது

கற்பிட்டி முகாமிலிருந்து படகுகள் வருமுன்னர் கப்பல் கடலில் முற்றாக மூழ்கியது.

இக்கப்பலின் இழப்பினால் இராணுவ நடவடிக்கைகளில் தாக்கம் ஏற்பட்டுள்ளது' ஏனெனில் ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் எடுத்துச்செல்ல முதுகெலும்பாகவிருந்த 'வை-8' ரக விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டபின்னர் இந்த 'கன்டுல' கப்பலே முழுப் பொறுப்பையும் ஏற்றிருந்தது.

அமிழ்ந்துபோன இக் கப்பலிலிருந்த ஆயுதங்களின் பெறுமதி கட்டைகாட்டில் பறிகொடுத்த ஐந்துகோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை விட பலமடங்கு அதிகமானது என பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இப்படகு மூழ்கிய செய்தி கடந்த 10ம் திகதி ஈழநாட்டில் வெளிவந்ததுதெரிந்ததே) (சி)

---

# கொழும்பில் தமிழர் வீடுகளில் தொடர்ந்தும் சூறையாடல்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் முஸ்லிம்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் வசித்து வரும் தமிழர்கள் அடிக்கடி முஸ்லிம்களால் தாக்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு கொம்பனித் தெரு, பண்டாரநாயக்கா மாவத்தை போன்ற இடங்களில் வசித்துவரும் தமிழர் பலரின் வீடுகள், கடந்த வாரம் முஸ்லிம்களால் சூறையாடப்பட்டதுடன் தமிழர் மீதும் தாக்குதல் சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

மேற்படி இடங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளும் முஸ்லிம்காடையர்களின்தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளது. இப்பாடசாலைகளில் கல்வி கற்பித்து வந்த தமிழ் ஆசிரியர் பலர் முஸ்லிம்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகி படு காயமடைந்துள்ளார்கள்.

தற்போது இப்பகுதிகளைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

---

# கொள்ளையர்களிடமிருந்து 13 லட்சம் ரூபா மீட்பு

(கொழும்பு)

கொழும்பில் இரு தனியார் நிறுவனங்களில் கொள்ளையடிக்கப்பட்ட பல லட்சம் ரூபா பணத்தில் 13 லட்சம் ரூபா மீட்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு பணியகத்தைச் சேர்ந்த இரு துப்பறியும் நிபுணர்களே இப் பணத்தினை மீட்டுள்ளனர். மிகுதிப் பணத்தையும் மீட்கும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது' (சி

---

# ஆரம்ப சுகாதார பயிற்சி

(புலோலி)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கரவெட்டிப் பிரிவுக்கிளையினால் 46 யுவதிகளுக்கு ஆரம்ப சுகாதாரத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது

ஆரம்ப சுகாதாரப் பயிற்சியைப் பெற்ற இந்த 46 பேருக்கும் இன்னும் சில வாரங்களில் மீட்டல் பயிற்சியும் அளிக்கப்படும். (61)

---

# மறியல் போராட்டம் நடத்த எதிர்க்கட்சியினர் ஏற்பாடு

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியாவில் 31 மாணவர்கள் காணாமல் போனதையிட்டு ஆர்ப்பாட்ட மறியல்போராட்டமொன்றை நடாத்த எதிர்க்கட்சியினர் முடிவு செய்துள்ளனர்.

31 மாணவர்களையும் கடத்திச்சென்றவர்களுக்கு எதிராக இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் இந்த மறியல் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதில் 50க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது இதற்கான ஏற்பாடுகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக இரத்தினபுரி மாவட்ட எம். பி. டி ஜே. செனிவிரட்ன தெரிவித்தார். (சி)

---

# பொலிஸார் சூடு தமிழ் மீனவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - சத்துருக்கொண்டான் ஏரியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழ இளைஞர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் அவர் அந்த இடத்திலேயே பலியானார்.

நாவற்குடாவை சேர்ந்த மகேந்திரராஜா மகாதேவன் என்ற வாலிபரே சூட்டுக்குப் பலியானவராவார்.

மீன்பிடி வலையுடன் இவரது சடலம் படகிலிருந்து மீட்கப்பட்டு பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (சி)

---

# சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கடமைகளும் பொறுப்புக்களும்

## மாகாண அமைச்சினால் அறிவிப்பு

(உடுவில்)

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்குரிய கடமைகளும் பொறுப்புக்களும் திட்டவட்டமாக வரையறுக்கப்படாமல் இருந்துவந்த குறைபாடு நீக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களின் கடமைகளையும், பொறுப்புக்களையும் திட்டவட்டமாக வரையறை செய்து பிரதேசக்கல்விப் பணிப்பாளர்கள் மூலம் அவர்களுக்கு அறிவித்துள்ளது. வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் முகாமைத்துவ அமுலாக்கல் பிரிவினரால் ஆசிரிய ஆலோசகர்களுக்கான பொறுப்புக்களும், கடமைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன.

மருதனாமடம் கோட்டக்கல்வி அலுவலகத்தில் வைத்து ஆசிரிய ஆலோசகர்களுக்குரிய கடமைகள், பொறுப்புக்கள் பற்றிய அறிவுறுத்தல்களும், புதிய ஆசிரிய ஆலோசகர்களுக்குரிய நியமனக் கடிதங்களும் யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்தினால் வழங்கப்பட்டது.

சேவைக்கால பயிற்சி ஆலோசகர்கள் உண்மையில் பாடவிதான முகாமைத்துவத்தில் முக்கிய பங்காளிகளாக உள்ளனர். அவர்கள் தமது பாடத்தில் மாணவர்கள்தமது அடைவு மட்டத்தை உச்ச நிலைக்கு உயர்த்த சகலநிலையிலும் பொறுப்புடையவர்களாவர் என திரு. சுந்தரலிங்கம் எடுத்துக்கூறினார். (109)

---

# புலிகளின் பலத்தை குறைக்க வேண்டும்

## — அமைச்சர் செல்லச்சாமி

(கொழும்பு)

புலிகளின் பலத்தைக் குறைக்கவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு கிடையாது. எனவே அதன் பலத்தைக் குறைக்க அனைவரும் ஒருமித்திணைந்து செயல்படவேண்டும்.

இவ்வாறு கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

புலிகளுடனான யுத்தத்தில் அரசுக்கு தினமும் கோடிக் கணக்கான ரூபாய் செலவாகின்றது. வேறு ஒரு அரசு இன்று ஆட்சியில் இருந்தால் பதவியை விட்டு ஓடியிருக்கும்.

எமது ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா, வடக்கு.கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் அமைதியை ஏற்படுத்தியுள்ளார் என்று அமைச்சர் செல்லச்சாமி தமது உரையில் மேலும் குறிப்பிட்டார். (வி)

---

# நித்திரையில் பொருட்களை பறிகொடுத்த பயணி

(வட்டுக்கோட்டை)

அராலிவடக்கு குலவணையை சேர்ந்த மாணிக்கவாசகர் சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை கிளிநொச்சியில் பறிகொடுத்ததாக அறிவிக்கப்படுகிறது.

மாணிக்கவாசகர் கொழும்பிலிருந்து வந்து கிளிநொச்சியில் ஏழுநாட்களாக தடைப்பட்டு நின்றபோது ஒருநாள் கடையில் சாமான்கள் கொண்டுவந்த பெட்டியை வைத்துவிட்டு நித்திரைசெய்ததாகவும் விடிந்ததும் பெட்டியைப் பார்த்தபோது அது களவாடப்பட்டது தெரிந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து விடுதலைப் புலிகளுக்கு அறிவித்ததையடுத்து அவர்கள் உடனடியாக ஸ்தலத்திற்குச் சென்று தேடுதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (139)

---

# தீவக மாணவர் கல்விச்சேவை

(ஆனைப்பந்தி)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில்உள்ள தீவகமாணவர்களுக்கான கல்விச்சேவையை டிசம்பர் மாதம் வரை சாவகச்சேரி கோட்டம் மேற்கொள்ளும். (101)

★ கொழும்பில் கரிநாளில்

# இந்து ஆலயத்தினுள் நுழைந்து முஸ்லிம் கும்பல் தாக்குதல்

## கோயிலுக்கு பலத்த சேதம்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கடந்த வெள்ளிக்கிழமை அனுஷ்டித்த 'கரிநாளில்' பண்டாரநயக்கா மாவத்தையிலுள்ள 'இந்து' ஆலயமொன்றை முஸ்லிம் கும்பல்கள் தாக்கி பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

கோயிலின் பின்புறக்கதவை உடைத்து உட்புகுந்த ஆயுதக் கும்பல் கோயிலின் பெரும் சேதங்களை விளைவித்ததுடன், உடைமைகளையும் அடித்து நொருக்கியுள்ளது.

இது பற்றி பொலிசாரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதும் அங்கு வந்த பொலிசாரைக் கண்ட கும்பல் அங்கிருந்து தப்பியோடி விட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதுவேளை கொழும்பு மாநகரசபையின் தமிழ் உறுப்பினர் ஒருவரின் கார், ஜிந்துப்பிட்டியில் கும்பலொன்றினால் தீவைக்கப்பட்டு எரிக்கப்பட்டதுடன், அங்கிருந்த பல தமிழர்களின் வீடுகள் கல்வீச்சுக்கும் இலக்காகியுள்ளன. (சி)

# 2,116ம் ஆண்டில் உலகம் அழியுமாம்

(சிட்னி)

2,116ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி, உலகம் அழியும் சாத்தியம் உள்ளதாக நட்சத்திரவியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் தற்போது நடைபெற்றுவரும் விண்வெளியியல் மாநாட்டில் உரையாற்றிய அந்த நிபுணர் மேலும் கூறுகையில்:

2,116ம் ஆண்டு ஆகஸ்ட் 14ம் திகதி, பாரிய வால்வெள்ளி ஒன்று பூமியுடன் மோதும் என்றும், இதனால் 10 லட்சத்துக்கும் அதிகமான அணுகுண்டுகளை விடவும் சக்தி கூடிய வெடிப்பு ஒன்று ஏற்பட்டு உலகில் பெரும்பாலான உயிரினங்கள் அழிந்துவிடும் என்றும் குறிப்பிட்டார். (சி)

# கொழும்பு கலவரம் 15 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக 15 பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கலவரங்கள் தொடர்பாக மருதானை பொலிசார் 8பேரையும், வாழைத்தோட்டப் பொலிசார் 7பேரையும் கைது செய்தனர்.

இவர்களில் சிலரை வன்செயலில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அடையாளம் காட்டியுள்ளனர். (சி)

# லலித் கட்சியின் உப தலைவர் ராஜினமா

(கொழும்பு)

லலித்-காமினியின் கட்சியான ஜனநாயகஐக்கியதேசிய முன்னணியின் உபதலைவியான திருமதி மல்லிகா டி. மெல் கட்சியிலிருந்தும் தனது பதவியிலிருந்தும் விலகியுள்ளார்.

கட்சியின் போக்கில் அதிருப்தியுற்றே இவர் கட்சியின் அங்கத்துவத்திலிருந்தும், சகல பொறுப்புகளிலிருந்தும் விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

தமது விலகலை இவர் கட்சியின் செயலருக்கு அறிவித்துள்ளார். (சி)

## 'யுனிசெவ்'வினல் 14 கழிவகற்றும் வண்டிகள் அன்பளிப்பு

(திருநெல்வேலி)

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் யுனிசெவ் யாழ்ப்பாண மாநகர சபைக்கு 14 கழிவு அகற்றும் வண்டிகளை இன்று பிற்பகல் 3 மணிக்கு வழங்கவுள்ளது.

யுனிசெவ் நிறுவன உயரதிகாரி றிபேக்கா அவர்களினால் உத்தியோக பூர்வமாக இந்த 14 வண்டிகளும் மாநகரசபை ஆணையாளர்திரு. பாலசிங்கத்திடம் கையளிக்கப்படும்.

இதனைத்தொடர்ந்து மாற்றலாகிச் செல்லவுள்ள யுனிசெப் உயரதிகாரிக்கு யாழ். மாநகர சபையினரால் தேனீர் விருந்துபசாரமும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (157)

## இன்று முதல் மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளிலும் பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு, இன்று முதல் ஒரு லீற்றர் மண்ணெண்ணை 15-00 ரூபாவுக்கு வழங்கப்படவுள்ளது.

கப்பலில் பிரத்தியேகமாகக் கொண்டு வரப்பட்ட மண்ணெண்ணையே இவ்வாறு விநியோகிக்கப்படவுள்ளது. (வி)

## 200 குடும்பங்களுக்கு தொழுநோய்

(உடுவில்)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தொழுநோயினால் பீடிக்கப்படுவோரின் தொகை அதிகரித்துள்ளது.

இப்பகுதிகளில் உள்ள சுமார் 200 குடும்பங்களில் தொழுநோய் பரவி உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (109)

## எழுத்தாளர் கலைஞர் சந்திப்பு

(பருத்தித்துறை)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக வடமராட்சிக் கோட்ட செயலகம் அப்பகுதியிலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்களுடனான சந்திப்பு ஒன்றை விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டு வடமராட்சிப் பொறுப்பாளர் திரு.பாஸ்கரன் தலைமையில் நடாத்தியது.

கலை, பண்பாட்டுக் கழக யாழ் மாவட்ட பொறுப்பாளர் திரு. சிட்டு, வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள். 52

## பெருமளவு பயணிகள் ஆலங்கேணியில் தரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆலங்கேணியில் பெருந்தொகையான பயணிகள் யாழ்ப்பாணம் வருவதற்காகக் காத்துநிற்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நூற்றுக்கணக்கான பயணிகள் ஆலங்கேணியில் தரித்து நிற்பதாக அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக கிளாலிப் போக்குவரத்து பாதிப்படைந்தமையே இவர்கள் இவ்வாறு தரித்து நிற்பதற்குக் காரணமாகும். (159)

## அகதிகளுக்கு 14 ரூபாவிற்கு 1 லீற்றர் மண்ணெண்ணை

(வட்டுக்கோட்டை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருப்போருக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 14 ரூபா வீதம் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யும் 6 ரூபா வீதம் 2 சவர்க்காரமும்வழங்கி வருகின்றது.

மேற்படி பிரிவிலுள்ள புதிய அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கும் ஒவ்வொரு குடும்பங்களுக்குமே ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் இரண்டு சவர்க்காரம் என்பன இந்த சகாய விலையில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (139)

### அரசும்-புலிகளும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிரமரட்ண நாடாளுமன்றத்தில் அவசரகால நீடிப்பு பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், தற்போதைய யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் என்றும் முதலில் ஒரு போர் நிறுத்தத்தை செய்து கொண்டு பின் இரு தரப்பினரும் மீதமாகவுள்ள பிரச்னைகளை நேரடியாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றார்.

### நீர்மூழ்கி கப்பல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூழ்கி கப்பல் தெரியாத தன்மையில் தயாரிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் வடபகுதி கடலில் பெரும் பலத்துடன் இருப்பதாகவும் 'ஐலண்ட்' தெரிவித்துள்ளது. (சி)

### 10 கவலரண்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் சகிதம் முன்னேறி வந்த இராணுவ அணிகளும், புலிகளின் மற்றோர் அணியினால் தாக்கி விரட்டப்பட்டன.

தாக்கி விரட்டப்பட்ட இராணுவத் தரப்பிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலில் புலிகள் தரப்பில் லெப் நிரோஜ் (உதயகுமார் ரஞ்ஜித்-வந்தாறுமூலை, மட்டக்களப்பு), லெப் சசிகுமார் (பிலிப் டயஸ் தியோனிஸ் டயஸ்-தாழ்வுப்பாடு, மன்னார்), லெப் இறையனார் (பேரு செபமாலை-வஞ்சியன்குளம், வங்காலை) ஆகியோர் வீரச் சாவு அடைந்தனர்.

இத்தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ஆர். பி. ஜி-1, இதற்குரிய எறிகணைகள்-3, இதற்குரிய புறப்பிளர்கள்-3, ஏ கே இலகு இயந்திர துப்பாக்கி-1, இதற்குரிய ரம் ரவைக் கூடுகள்-4, தொடர் ரவைகள் - 450, ரி-81 ரக துப்பாக்கி-8, இதற்குரிய ரவைக்கூடுகள்-55, ரி-56 ரக ரவைக்கூடுகள்-6, ஐ-3 ரக ரவைக்கூடு-1, நடுத்தர ரவைகள்-8455, ஜே. ஆர். கைக்குண்டுகள்-5, புகைக்குண்டுகள்-2, நேற்ரோர ரவைகள்-81, நடுத்தர காஸ் ரவைகள் -7, தொலைத்தொடர்பு சாதன மின்கலங்கள் - 2, தலைக்கவசங்கள் - 2, இராணுவ மற்றும் சிவில் சப்பாத்துக்கள் - 47, ஏ. கே. ரவைக்கூடுகள் தாங்கி அணிகள் 8, ராணுவ உருமறைப்பு சீருடைகள் - 30 சோடி, தொப்பிகள் - 14, தபாற்பைகள் - 9, தண்ணீர் கான் - 13, தண்ணீர் கான் அணிகள் - 12, உணவுப் பெட்டிகள் - 11, இராணுவ பைகள் -8, இராணுவ பட்டிகள் - 18, ஒளிப்பதிவு கருவி-1. (சு-சி)

### 10,000 சிங்களவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாகப் பாதுகாப்பு வழங்கவேண்டும் எனவும், இல்லாவிடில் இப்பகுதியிலிருந்து வெளியேறப் போவதாகவும் கூறி, கையெழுத்து வேட்டையில் இறங்கினர்.

ஏற்கனவே இப்பகுதியிலுள்ள பல எல்லைக்கிராமங்களிலிருந்து பெருமளவு சிங்களவரும் முஸ்லிம்களும் இடம்பெயர்ந்துள்ளதாகவும் மேலும் மக்களை இப்பிரதேசத்திலிருந்து வெளியேறுவதை தடுக்கவும் அரசு தீவிரமுயற்சிகளை மேற்கொண்டுள்ளது. (சி)

### முஸ்லிம் படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட ரீதியான ஆயுதங்களுடன் முஸ்லிம்களின் பாரம்பரிய கலாசாரத்திற்கேற்ப இந்த ஆயுதப் படை தயாராவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்தப் படை முழுக்க முழுக்க இராணுவ கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படுமெனவும் கூறியுள்ளார். (சி)

## 30ம் திகதி குமண புறப்படும்

(திருநெல்வேலி)

குமணக்கப்பல் 30ம் திகதி புறப்பட்டுச் செல்ல உள்ளது. இக்கப்பலில் க. பொ. த உயர்தர பௌதிகவியல் 2 பரீட்சை விடைத்தாள் பொதிகளும் மற்றும் வெளியூர் கடிதப் பொதிகளும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இதேவேளை இக்கப்பலில் யாழ். மாவட்ட ஆணையாளர் திரு. மாணிக்கவாசகர் அவர்களும் கொழும்பு செல்ல உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157)

### 60 நாட்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தின் 4 புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கால கட்டத்தில் படையினர் விலகிவருவதும், ஆயுதங்களுடன் தப்பி ஓடுவதும் பெரும் சிக்கலை தோற்றுவித்திருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். (சி)

### முஸ்லிம் எம்.பிக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தன.

இது குறித்து அமைச்சர் ஹமீத் கூறுகையில், முஸ்லிம் எம். பிக்கள் பதவி விலகுவதால் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு கிடைத்துவிடாதென்றார். இதே போன்றே பல முஸ்லிம் எம். பிக்களும் கூறியுள்ளனர். (சி)

### ராணுவ தலைமைப்பீட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு-கிழக்குப் பாதுகாப்பு நிலைமை குறித்து ஒவ்வொரு வாரமும் கூட்டப்படும் மாநாட்டில் இதன் பிரதிபலிப்பு எதிரொலிப்பதாகவும், சூடான விவாதங்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் சாதாரண அதிகாரிகளும், சிப்பாய்களும் வெறுப்புற்ற நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

### 500 பொலிஸார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட்டுள்ளனர்

மேலும் இப்பகுதிகளில் பாதுகாப்பை அதிகரிக்க விஷேட பயிற்சி பெற்ற ஊர்காவல் படையினரும் அனுப்பப்படவுள்ளனர்.

எல்லைப்பாதுகாப்பிற்கென புதிதாக 5000 பேரைக் கொண்ட படையினர் இப்பகுதிகளுக்கு அனுப்பும் வரை அரசுக்கு பெரும் நெருக்கடியே என அரசு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (சி)

### தெரிவுக் குழுவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் சிலர் தெரிவுக்குழுவின் நடவடிக்கைக்கு ஆதரவளிக்காமல் தெரிவுக் குழுவுடன் முரண்பட்டு வருகிறார்களாம்.

இந்த முரண்பாட்டு நிலையால் தெரிவுக்குழுவின் சில நடவடிக்கைகளில் ஒருமித்த முடிவுகளை மேற்கொள்வதில் பெரும் சிக்கல் தோன்றியுள்ளதாம். (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81